# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4

# முதலாந்தவணைப் பரீட்சை – 2016

## சைவநெறி

## தரம் - 10

சுட்டெண்:.................................. நேரம் : 2 ½ மணி

பகுதி I

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்....” எனப் பாடியவர்

1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

02. பின்வருவனவற்றுள் விழுமியப்பண்பாய் அமைவது

1) பொய்கூறல் 2) களவெடுத்தல் 3) நேர்மை 4) அன்பில்லாமை

03. நட்சத்திரங்களின் எண்ணிக்கையாக அமைவது.

1) 25 2) 27 3) 29 4) 18

04. நாம் நித்திரை விட்டெழுந்தவுடன் இறை சிந்தனையுடன் செய்யத்தக்கது.

1) புத்தாடை அணிதல் 2) தேவாரம் பாடுதல்
3) சிவ மந்திரத்தை உச்சரித்தல் 4) உணவு உண்ணல்

05. தட்சிணாயன காலம்

1) தை முதல் ஆனி வரை 2) சித்திரை முதல் மார்கழி வரை
3) தை முதல் ஆடி வரை 4) ஆடி முதல் மார்கழி வரை

06. முதலாவது பஞ்சாங்கத்தை கணித்தவர்

1) ஆரியப்பட்டர் 2) கௌடில்யர்
3) திருமூலர் 4) மெய்கண்டதேவர்

07. வட பாரதத்தில் ஜெகத் ராத்திரி என அழைக்கப்படும் பண்டிகை

1) தைப்பொங்கல் 2) ஓணம் பண்டிகை
3) தீபாவளி 4) போகிப் பண்டிகை

08. வேதங்களை நான்காக வகுத்தவர்

1) நம்பியாண்டார் நம்பி 2) வியாசர்
3) சாணக்கியர் 4) ராஜராஜ சோழன்

09. விநாயக சஷ்டி விரத்தின் மறுபெயராக அமைவது.

1) பெருங்கதை விரதம் 2) சதுர்த்தி விரதம்
3) திருவெம்பாவை விரதம் 4) கார்த்திகை விரதம்

10. திருமணக்கிரியையிலே உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்துவது.

1) காப்புக்கட்டுதல் 2) பால்பழம் புசித்தல்
3) கன்னிகாதானம் 4) மாலை மாற்றுதல்

11. இருக்கு வேத காலத்தில் அதிகளவு பாடல்களால் போற்றப்பட்டவன்

1) சோமன் 2) அக்கினி 3) இந்திரன் 4) வருணன்

12. இறைவன் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைப் புரியும் நிலை

1) சொருபநிலை 2) தடத்தநிலை 3) முத்திநிலை 4)ஞானநிலை

13. பாடசாலைகளில் நடைபெறும் சமய விழாவாக அமைவது

1) நவராத்திரி 2) புதுமனைப் புகுவிழா
3) புதுவருடப் பிறப்பு 4) உபநயனச் சடங்கு

14. பத்தாம் திருமுறையில் அடங்குவது

1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருமந்திரம்

15. மந்திரம், மாயம் மருந்து போன்றவற்றிற்கு முதன்மை அளிக்கும் வேதம்

1) இருக்கு வேதம் 2) யசுர் வேதம் 3) சாம வேதம் 4) அதர்வ வேதம்

16. வாழ்வின் உறுதிப் பொருட்களாக விளங்குபவை

1) சரியை, கிரியை, யோகம், ஞானம்
2) தாச, சற்புத்திர, சக, சன்மார்க்கம்
3) அறம், பொருள், இன்பம் வீடு
4) சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம்

17. அருளல் தொழிலைச் செய்யும் மூர்த்தம்

1) பிரமா 2) உருத்திரன் 3) மகேஸ்வரன் 4) சதாசிவன்

18. சூரியன் நிற்கும் இடத்திலிருந்து சந்திரன் நிறகும் தூரத்தைக் குறித்து நிற்பது.

1) வாரம் 2) திதி 2) யோகம் 4) கரணம்

19. ஆயுட்காரன் என அழைக்கப்படுபவர்

1) சனி பகவான் 2) விஷ்ணு பகவான் 3) சூரியன் 4) சந்திரன்

20. இறைவனுக்கு 108 பெயர்களைச் சொல்லிச் செய்யப்படும் அர்ச்சனை

1) சகஸ்ர நாமம் 2) லலிதா நாமம் 3) அட்டோத்திர நாமம் 4) விஷ்ணு நாமம்

21. ஆலயம் அமைப்பதற்கான இடம் அமைப்பு முறை. படிம இலக்கணம் என்பனவற்றைக் கூறும் நூல்

1) வேதங்கள் 2) ஆகமங்கள் 3) புராணங்கள் 4) இதிகாசங்கள்

22. சுந்தரமூர்த்தி நாயனார் இடக்கண் பார்வை பெற்ற தலம்

1) திருவேகம்பம் 2) திருவாரூர் 3) சிதம்பரம் 4) திருவொற்றியூர்

23. பின்வருவனவற்றுள் பூர்வக் கிரியையாக அமைவது.

1) சிரார்த்தம் 2) அந்தியேட்டி 3) திருமணச் சடங்கு 4) திவசம்

24. சந்திர மாதங்கள் தொடங்கும் மாதமாக அமைவது.

1) சித்திரை 2) ஆடி 3) தை 4) மார்கழி

25. இறைவனைத் தந்தையாக நினைத்து வழிபட்டவர்.

1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மணிவாசகர்

(25×1=25 பள்ளிகள்)

## பகுதி II

முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட ஏனைய வினாக்களில் விரும்பிய மூன்றைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. சுருக்கமான விடை எழுதுக.

1) வீட்டிலே நாளாந்தம் இறை சிந்தனையுடன் கருமமாற்றும் செயல்கள் 2 தருக.
2) விழுமியப் பண்புகள் இரண்டு தருக.
3) “அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு” எனக்கூறியவர் யார்?
4) எமது நாட்டில் புழக்கத்திலுள்ள பஞ்சாங்கங்கள் இரண்டும் எவை?
5) சனி பகவனால் பீடிக்கப்படாத இருவர் யார்?
6) தீபாவளிப் பண்டிகையிலே தவிர்க்கப்பட வேண்டிய இரண்டு விடயங்கள் தருக.

7) திருமணக் கிரியையிலே மோதிரம் எடுத்தல் நிகழ்வு நடைபெறுவதற்கான காரணம் யாது?

8) வேதங்களிலே காலத்தால் முற்பட்ட வேதம் எது?

9) ஆகமம் என்பதன் பொருள் யாது?

10) முருகனுக்குரிய விரதங்கள் 2 தருக.

(10×2=20 பள்ளிகள்)

02. பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

1. அங்கமும் வேதமும்……………….
2. குனித்த புருவமும்……………….
3. மீனா அடிமை………………
4. உற்றுமை சேர்வது…………..
5. நாமார்க்கு குடியல்லோம்…………..

(16 புள்ளிகள்)

03. “விரதம் எனப்படுவது உணவை சுருக்குதல் அல்லது விடுத்தல் ஆகும்”

1. விநாயக சஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படுகிறது?
2. கந்த சஷ்டிவிரதம் உணர்த்தும் மெய்ப்பொருள் யாது?
3. சனி பகவானுக்குரிய முக்கிய விரதப் பொருட்கள் எவை?

(13 புள்ளிகள்)

04. “இரு மனம் இணைந்ததே திருமணமாகும்”

1. வாழ்வியற் சடங்குகள் 3 தருக.
2. இல்வாழ்க்கைக்குத் தேவையான ஏழு பொருட்களும் எவை?
3. அம்மி மிதித்தல் என்றால் என்ன? அதன் நோக்கம் யாது?

(13 புள்ளிகள்)

05. “இறை சிந்தனையுடன் செயலாற்றுவோம்”

1. பாடசாலையில் இறை சிந்தனையுடன் செய்யப்படும் செயல்கள் 4 தருக.
2. பாடசாலையில் சமய விழாக்களைக் கொண்டாடுவதனால் மாணவர் அடையும் நன்மைகள் 3 தருக.
3. பூர்வக் கிரியைகள் 4 தருக.

(13 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. இருக்கு வேதம்
2. தீபாவளிப் பண்டிகை
3. அன்புடைமை
4. ஆகமம்

(13 புள்ளிகள்)

.